


admin@dhinakani.com
RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி
NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்




| Vol: 03 | Issue: 179 | 4 Pages | 27.01.2026 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 03 | இதழ்: 179 | 4 பக்கங்கள் | 27.01.2026 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**தேரான் தெளிவுந் தெளிந்தான்கண் ஐயுறவும்**
**தீரா இடும்பை தரும்**

**விளக்கம்:**
**ஒருவனை ஆராயாமல் தெளிவடைதலும், ஆராய்ந்து தெளிவடைந்த ஒருவனிடம் ஐயப்படுதலும் ஆகிய இவை நீங்காதத் துன்பத்தைக் கொடுக்கும்.**

## மியான்மரில் ஒரே நாளில் அடுத்தடுத்து 2 முறை நிலநடுக்கம்

நேபிடா, ஜன.27

மியான்மர் நாட்டில் கடந்த ஆண்டு மார்ச் மாதம் 28ந்தேதி ரிக்டர் 7.7 மற்றும் ரிக்டர் 6.4 அளவில் அடுத்தடுத்து பயங்கர நிலநடுக்கங்கள் ஏற்பட்டன. இதனால் அந்த நாட்டின் பல்வேறு பகுதிகளில் பலத்த சேதம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கத்தில் சுமார் 3,700 பேர் உயிரிழந்ததாகவும், 5 ஆயிரத்திற்கும் அதிகமானோர் படுகாயமடைந்ததாகவும் அந்நாட்டு அரசு தெரிவித்தது.

இதனை தொடர்ந்து மியான்மரில் அவ்வப்போது சிறிய அளவிலான நிலநடுக்கங்கள் ஏற்பட்டு வருகின்றன. அந்த வகையில், மியான்மரில் இன்று நிலநடுக்கம் ஏற்பட்டது. மாலை 4.13 மணியளவில் (இந்திய நேரப்படி) ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 3.6 ஆக பதிவானதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

60 கி.மீ. ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம், 22.61 டிகிரி வடக்கு அட்ச ரேகையிலும், 93.73 டிகிரி கிழக்கு தீர்க்கரேகையிலும் இருக்கும் என முதலில் தீர்மானிக்கப்பட்டது.

இதனையடுத்து, மியான்மரில் ரிக்டர் 3.5 அளவில் மாலை 4.24 மணியளவில் மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது. மியான்மரில் ஒரே நாளில் அடுத்தடுத்து இரண்டு முறை நிலநடுக்கம் ஏற்பட்ட சம்பவம் அப்பகுதியில் அச்சத்தை ஏற்படுத்தியது. இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட பாதிப்பு குறித்து எந்தவித தகவலும் வெளியாகவில்லை.

## கனடாவில் மற்றொரு சம்பவம்; இந்திய வம்சாவளி இளைஞர் பொது வெளியில் படுகொலை




டொரண்டோ, ஜன.27

கனடா நாட்டில் இந்து கோவில்கள் மீது தாக்குதல் நடத்தும் சம்பவங்கள் கடந்த ஆண்டு பரபரப்பாக பேசப்பட்டது. இந்நிலையில், அந்நாட்டில் இந்திய வம்சாவளியை சேர்ந்த பலர் தாக்குதலுக்கு இலக்காகும் சம்பவங்கள் அதிகரித்து காணப்படுகின்றன.

இந்நிலையில், கனடாவின் பர்னாபி நகரில் பொது வெளியில் இந்திய வம்சாவளியை சேர்ந்த தில்ராஜ் சிங் கில் (வயது 28) என்ற இளைஞர் மர்ம நபர்களால் சுட்டு படுகொலை செய்யப்பட்டு உள்ளார். வான்கோவர் பகுதியை சேர்ந்தவரான கில், பிரிட்டிஷ் கொலம்பியா பகுதியில் நடந்து வரும் கும்பல் தாக்குதலின் ஒரு பகுதியாக கொல்லப்பட்டு இருக்கலாம் என போலீசார் சந்தேகிக்கின்றனர்.

சம்பவம் பற்றி அறிந்து ராயல் கனடா போலீசார் உடனடியாக அந்த பகுதிக்கு சென்றபோது தில்ராஜ் படுகாயங்களுடன் போராடியபடி இருந்திருக்கிறார். உயிர்காக்கும் முயற்சிகளை மேற்கொண்டபோதும், அவரை காப்பாற்ற முடியவில்லை.

சம்பவ பகுதியருகே கார் ஒன்று தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்தது. இது போன்ற வன்முறையின்போது, வாகனங்களுக்கு தீ வைத்து விட்டு கும்பலை சேர்ந்தவர்கள் தப்பி செல்வது என்பது ஒரு பொதுவான யுக்தியாக செய்யப்பட்டு வருகிறது என போலீசார் குறிப்பிட்டனர்.

சமீபத்தில் அபோட்ஸ்போர்டு பகுதியில் இந்திய வம்சாவளியை சேர்ந்த தர்சன் சிங் சாஹ்சி என்ற தொழிலதிபர் சுட்டு கொல்லப்பட்டார். அதனுடன், இந்த படுகொலைக்கு தொடர்பிருக்கும் என உள்ளூர் ஊடகங்கள் தெரிவிக்கின்றன. இதுபற்றி போலீசார் விசாரித்து வருகின்றனர்.

## டெல்லி குடியரசு தினவிழாவில் கம்பீரமாக அணிவகுத்து சென்ற தமிழ்நாட்டு அலங்கார ஊர்தி



புதுடெல்லி, ஜன.27

நாட்டின் 77வது குடியரசு தின விழா இன்று கொண்டாடப்பட்டு வருகிறது. 77வது குடியரசு தின விழாவையொட்டி டெல்லி கடமைப் பாதையில் ஜனாதிபதி திரவுபதி முர்மு தேசிய கொடியை ஏற்றினார். அப்போது, இந்தியாவின் படை வலிமை, பன்முக கலாசாரத்தை பிரதிபலிக்கும் வகையில் அணிவகுப்பு நடந்தது.

இந்த அணிவகுப்பில் தமிழக அரசின் வாகனம் அணிவகுத்தது. தமிழக அரசின் வாகனத்தில் ஜல்லிக்கட்டு காளையை மாடுபிடி வீரர்கள் அடக்குவது போன்ற முகப்பு காட்சி வடிவமைக்கப்பட்டிருந்தது. தமிழ்நாட்டின் பண்பாட்டை பறைசாற்றும் அலங்கார வாகனத்தின் இருபுறமும் கலைஞர்கள் சிலம்பாட்டம், மயிலாட்டம் ஆடியபடி சென்றனர். தமிழ்நாட்டை தொடர்ந்து, புதுச்சேரி, உத்தரப்பிரதேசம், மேற்குவங்கம், மத்தியபிரதேசம், பஞ்சாப் வாகனங்கள் அணிவகுத்தன.

## போர் வீரர்கள் நினைவிடத்தில் பிரதமர் மோடி மரியாதை



புதுடெல்லி, ஜன.27

குடியரசு தினத்தையொட்டி, போர்களில் நாட்டுக்காக தங்களது இன்னுயிரை தியாகம் செய்த வீரர்களை நினைவுகூறும் வகையில், டெல்லி இந்தியா கேட் பகுதியில் உள்ள போர் வீரர்கள் நினைவிடத்துக்கு பிரதமர் மோடி சென்றார். அங்கு பிரதமர் மோடியை பாதுகாப்புத்துறை மந்திரி ராஜ்நாத்சிங் முப்படைகளின் தளபதிகள் வரவேற்றனர்.

போர் வீரர்களின் நினைவிடத்தில் பிரதமர் மோடி மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார். அப்போது 2 நிமிடங்கள் மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது. அதனை தொடர்ந்து, குடியரசு தின அணிவகுப்பு நிகழ்ச்சியில் பிரதமர் கலந்துகொள்கிறார். அங்கு ஜனாதிபதி திரவுபதி முர்மு, துணை ஜனாதிபதி சி.பி. ராதாகிருஷ்ணன் ஆகியோருடன் குடியரசு தின அணிவகுப்பு நிகழ்ச்சியை பார்வையிட உள்ளார்.

# மின்சாரம் தாக்கி உயிரிழந்தவரின் குடும்பத்துக்கு ரூ.3 லட்சம் நிதியுதவி: முதல்அமைச்சர் அறிவிப்பு

சென்னை, ஜன.27

கள்ளக்குறிச்சியில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தவரின் குடும்பத்துக்கு ரூ.3 லட்சம் நிதியுதவி வழங்கிட முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: கள்ளக்குறிச்சி மாவட்டம் மற்றும் வட்டம், உடையநாச்சி கிராமத்தைச் சேர்ந்த ரமேஷ் (45) என்பவர் 24.1.2026 அன்று இரவு கட்டடப் பணி நடந்து கொண்டிருந்த அவரது வீட்டிற்கு மின்விளக்குப் போட முயன்றபோது எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கியதால் உயிரிழந்தார் என்ற செய்தியறிந்து மிகவும் வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.




உயிரிழந்த ரமேஷ் என்பவரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த ஆறுதலைத் தெரிவித்துக்கொள்வதுடன் முதல்அமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து மூன்று லட்சம் ரூபாய் வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குடியரசு தினத்தை முன்னிட்டு சூர்யா நற்பணி இயக்கம் சார்பில் குழந்தைகளுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டது

*Headlines:* குடியரசு தினத்தை முன்னிட்டு சூர்யா நற்பணி இயக்கம் சார்பில் குழந்தைகளுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டது

77'ஆம் குடியரசு தினத்தை முன்னிட்டு திருப்பூர் தெற்கு மாவட்டம் இளைஞரணி சூர்யா தலைமை நற்பணி இயக்கம் சார்பாக தாராபுரம், சூரியநல்லூர் வட்டம் தாயம்பாளையம் ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளியில் குழந்தைகளுக்கு நாட்டு புத்தகங்கள் மற்றும் கல்வி உபகரணங்கள் மற்றும் இனிப்புகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்வு மாவட்ட இளைஞரணி பொறுப்பாளர்களான குகன் மற்றும் அகிலன் தலைமையில் நடைபெற்றது.இதில் இளைஞர் அணி உறுப்பினர்களான மாயகிருஷ்ணன், மணிகண்டன், கணேஷ் வசந்த், நவீன்,



அஜய், சரவணன், கபிலன் ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும் சூர்யா நற்பணி இயக்கம் இளைஞர் அணி மாதம் ஒரு நற்பணி செய்து கொண்டு வருகின்றனர் எனவே வருடம் முழுவதும் மாதாமாதம் சமூகம் சார்ந்து அனைத்து நற்பணிகளும் செய்து வருகின்றனர்..

## திண்டுக்கல் – குமுளி ரயில் பாதைத் திட்டம்: 3 ஆண்டுகளில் பணிகள் தொடங்க வாய்ப்பு

திண்டுக்கல் முதல் சபரிமலை வரை அமைக்க திட்டமிடப்பட்டுள்ள ரயில் பாதைத் திட்டம் இரு கட்டங்களாக செயல்படுத்தப்பட உள்ளதாக மத்திய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் மக்களவையில் தெரிவித்தார்.

இதன் முதல் கட்டமாக திண்டுக்கல் – குமுளி (லோயர் கேம்ப்) அகல ரயில் பாதை அமைப்பதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் என அவர் கூறினார்.

இத்திட்டம் தொடர்பாக ஏற்கனவே நில அளவைப் பணிகள் நடைபெற்று வந்த நிலையில், 2ஆம் கட்ட நில அளவைப் பணி நிறைவடைந்த பின், அடுத்த 3 ஆண்டுகளில் ரயில் பாதை அமைக்கும் பணிகள் தொடங்க வாய்ப்பு உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ரயில் பாதைத்திட்டம் நிறைவேறுவதன் மூலம், தமிழக – கேரள எல்லைப் பகுதிகளில் சுற்றுலா வளர்ச்சி அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக கேரள மாநிலத்தில் உள்ள சுற்றுலா தலங்களுக்கு பயண வசதி மேம்படுவதுடன், இரு மாநில மக்களுக்கும் வேலைவாய்ப்புகள் உருவாகி, பொருளாதார முன்னேற்றம் ஏற்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தமிழகத்திலிருந்து காய்கறிகள் உள்ளிட்ட உணவுப் பொருட்கள் கேரளத்திற்கு எளிதாகக் கொண்டு செல்ல வழிவகுக்கும் என்றும் கூறப்படுகிறது.

இந்த அறிவிப்பைத் தொடர்ந்து நடைபெற்ற நிகழ்வில், திண்டுக்கல் – குமுளி அகல ரயில் பாதைத் திட்ட போராட்டக் குழுவினர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## நாடு முழுவதும் ஜனவரி 27ம் தேதி வங்கி வேலைநிறுத்தம்: தொடர்ந்து 4 நாட்கள் வங்கி சேவை பாதிப்பு

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, வங்கி ஊழியர் சங்கங்கள் ஜனவரி 27, 2026 அன்று நாடு தழுவிய வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபட உள்ளதாக அறிவித்துள்ளன.

இந்த வேலைநிறுத்தம் காரணமாக, ஜனவரி 27 முதல் தொடர்ந்து 4 நாட்கள் வங்கிகளின் வழக்கமான செயல்பாடுகள் பாதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் வங்கி கிளைகளில் நடைபெறும் பணிகள், பணப்பரிவர்த்தனை உள்ளிட்ட சேவைகள் முடங்கும் சூழல் உருவாகலாம்.

வங்கி ஊழியர் சங்கங்களின் கூற்றுப்படி, டிஜிட்டல்மயமாக்கல் காரணமாக வேலைப்பளு அதிகரித்துள்ளதும், போதுமான ஆள் சேர்ப்பு இல்லாததால் ஊழியர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதும் இந்த போராட்டத்திற்கு முக்கிய காரணங்களாகும்.

மேலும், பொதுத்துறை வங்கிகளை தனியார்மயமாக்கும் மத்திய அரசின் முயற்சிகளுக்கு எதிர்ப்பு, நீண்ட வேலை நேரம், குறைந்த பணியாளர்களுடன் அதிக வேலை செய்வது உள்ளிட்ட பிரச்சினைகளும் வலியுறுத்தப்பட்டுள்ளன.

அதேபோல், சம்பள உயர்வு மற்றும் வங்கி சீர்திருத்தங்கள் தொடர்பான கோரிக்கைகளும் இந்த வேலைநிறுத்தத்தின் முக்கிய அம்சங்களாக உள்ளன.

இந்த வேலைநிறுத்தத்தின் போது, வங்கி கிளைகளில் நேரடி சேவைகள் பாதிக்கப்படும், ஆனால் ATM, UPI, இணைய வங்கி உள்ளிட்ட ஆன்லைன் சேவைகள் வழக்கம்போல் செயல்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாடிக்கையாளர்கள் முன்கூட்டியே தங்களின் வங்கி தொடர்பான அவசர பணிகளை முடித்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

## குடியரசு தின அணிவகுப்பு விழா

தேனி மாவட்டம் குடியரசு தினவிழாவை முன்னிட்டு, தேனி மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ரஞ்ஜீத்சிங், இ.ஆ.ப., அவர்கள் தேசியக்கொடியை ஏற்றி வைத்து காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றார் . உடன் தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr.B.சினேஹாப்ரியா, இ.கா.ப., அவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகளும் தேசிய கொடிக்கு மரியாதை செலுத்தினர்.






ஆயுதப்படை காவல் ஆய்வாளர் திரு.S.ஜெயச்சந்திரன் அவர்கள் தலைமையில் காவல் அணிவகுப்பு மரியாதை நடைபெற்றது. இதனையடுத்து தேனி மாவட்டத்தில் பல்வேறு பிரிவுகளில் பணிபுரியும் 84 காவல் துறையினருக்கு முதலமைச்சரின் காவலர் பதக்கமும், சிறப்பான முறையில் பணிபுரிந்த 50 காவல்துறை அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்தார் ..



# குடியரசு தினம்: ரிப்பன் கட்டிட வளாகத்தில் மேயர் பிரியா தேசிய கொடி ஏற்றி மரியாதை

சென்னை, ஜன.27

குடியரசு தினத்தை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டிட வளாகத்தில் மேயர் பிரியா தேசிய கொடியினை இன்று ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;

"பெருநகர சென்னை மாநகராட்சியில் இன்று (26.01.2026) குடியரசு தின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. பெருநகரசென்னைமாநகராட்சி ரிப்பன் கட்டிட வளாகத்தில் மேயர் பிரியா தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். தொடர்ந்து, மூவர்ண பலூன்களை விண்ணில் பறக்க விட்டார்.



இதனைத் தொடர்ந்து, மேயர் தேசிய மாணவர் படையினர், சாரண, சாரணியரின் அணிவகுப்பு மரியாதையினை ஏற்றுக் கொண்டார். தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளி மாணவ, மாணவியரின் கண்கவரும் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

பின்னர், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு முறையாக சொத்துவரியினை உரிய காலங்களில் தாமதமில்லாமல் செலுத்தியவர்கள் மற்றும் அதிக சொத்துவரி செலுத்தியவர்களை கௌரவிக்கும் வகையில் சொத்து உரிமையாளர்களுக்கு பாராட்டுக் கடிதங்களை (Letter of Appreciation) மேயர் வழங்கினார்.

மேலும், 202425 ஆம் ஆண்டு குடும்ப நலத் திட்டப்பணிகளில் மாவட்ட அளவில் சிறந்த சேவை வழங்கிய மருத்துவம் சார்ந்த அலுவலர்களைப் பாராட்டிவிருதுகளையும், கொளத்தூர், ஜி.கே.எம். காலனியில் உள்ள திருமண மண்டபத்தின் சிறந்த கட்டிடக் கலைக்காக நிர்வாக இயக்குநர் அமுதா கிருஷ்ணமூரத்தியை பாராட்டி சான்றிதழ் மற்றும் கேடயங்களை வழங்கினார்.

தொடர்ச்சியாக, பெருநகர சென்னை மாநகராட்சியில் சிறப்பாகப் பணியாற்றிய 172 அலுவலர்கள் மற்றும் பணியாளர்களைப் பாராட்டிச் சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்களையும், அணிவகுப்பு மற்றும் கலைநிகழ்ச்சிகளில் பங்குபெற்ற சென்னை மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்களையும் மேயர் வழங்கினார்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாதாமாதம் மின் கட்டணம் வசூலிப்பதற்கு; ஸ்மார்ட் மீட்டர் பொறுத்துவதில் அலட்சியம்: ராமதாஸ் பேச்சு

சென்னை, ஜன.27

பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது;

தமிழ்நாட்டில் 2 மாதங்களுக்கு ஒருமுறை மின் கட்டணம் வசூலிக்கும் நடைமுறை பின்பற்றப்பட்டு வருகிறது. ஆனால், மின்கட்டணத்தை நிர்ணயிப்பதிலும், வசூலிப்பதிலும் நடைமுறை எதார்த்தத்தை புரிந்து கொள்ளாமல் தமிழ்நாடு அரசு கடைபிடித்து வரும் அணுகுமுறையால் நடுத்தரமக்கள் அதிக மின் கட்டணம் செலுத்தவேண்டியிருப்பதுடன்,பொருளாதார நெருக்கடிக்கும் ஆளாக வேண்டியிருக்கிறது. இந்த பிரச்சினைக்கு தீர்வு கான மின்கட்டணத்தை மாதந்தோறும் வசூலிக்கும் முறையை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கடந்த 2015ம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் வலியிறுத்தி, அறிக்கை வெளியிட்டேன்.

இந்நிலையில் கடந்த 2025ம் ஆண்டு ஜூன் மாதம் அப்போதைய மின் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு செய்தியாளர்களிடம் பேசியபோது, 2025ம் ஆண்டுக்குள் அனைத்துவீடுகள், வணிக பயன்பாட்டிற்கான மின் இணைப்புகளுக்கு ஸ்மார்ட்மீட்டர் பொருத்த தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.

முதற்கட்டமாக 9 மாவட்டங்களில் உள்ள 80 லட்சம் இணைப்புகளுக்கு பொருத்துவதற்கு டெண்டர் விடப்பட்டுள்ளது. ஸ்மார்ட்மீட்டர் மென்பொருள் மூலம் இயங்கவுள்ளது. இதன் மூலம் மின்சாரத் திருட்டை தடுத்தல், துல்லியமாக மின்சாரத்தை கணக்கிடுதல், மின்சார பயன்பாட்டை ஒரேஇடத்தில் இருந்து கணக்கிடுதல் போன்றவற்றை ஸ்மார்ட்மீட்டர் மூலம் கிடைக்கக்கூடிய நன்மைகளாகப் பட்டியலிடுகின்றனர் என்றார். ஆனால் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் மின்துறை அமைச்சர் சிவசங்கர் செய்தியாளர்களிடம் கூறியது, ஸ்மார்ட் மீட்டர்களை



பொருத்துவதற்கான டெண்டர் விடப்பட்டுள்ளது. விரைவில் அவை பொருத்தப்படும். ஸ்மார்ட்மீட்டர் செயல்பாட்டுக்கு வந்த பிறகு, மாதந்தோறும் மின் கட்டணம் கணக்கிட்டு வசூலிக்கும் முறை அமல் படுத்தப்படும் என்றார்.

கடந்த ஆண்டு அமைச்சர் தங்கம் தென்னரசு ஸ்மார்ட் மீட்டர்பொறுத்த டெண்டர் விடப்பட்டது என்றார். டிசம்பர் மாதம் அமைச்சர் சிவசங்கர் இதையே முன் மொழிந்தார்.கடந்த2021ம்ஆண்டு திமுக வெளியிட்ட தேர்தல் அறிக்கையின் 221வது வாக்குறுதியில் இரண்டு மாதங்களுக்கு 1,000 யூனிட்டுக்கு குறைவாக மின்சாரம் பயன்படுத்துவோர் ஆண்டுக்கு ரூ.6 ஆயிரம்வரையில் பயன் பெறுவர் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த 5 ஆண்டுகால ஆட்சியில்தற்போது சென்னையின் ஒரு பகுதியில் மட்டும் சோதனை அடிப்படையில் ஸ்மார்ட் மீட்டர் பொறுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை தமிழகம் முழுவதும் நடைமுறைபடுத்த மேலும் 2 ஆண்டுகாலம் தேவைப்படும் என்றும் அதன் பின் மாதாமாதாம் மின் கணக்கீடு செய்ய அரசு முடிவெடுக்க வாய்ப்புள்ளதாக மின்வாரிய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

2026 சட்டசபைத்தேர்தல் கோடைகாலமானமே மாதம் நடைபெற வாய்ப்புள்ளது. அப்போது மின்சாரத்தை அதிக அளவு பயன்படுத்துவார்கள். இதனால் ஏற்படும் மின் கட்டண சுமையை ஏற்கும் அனைத்துதரப்பு மக்களும் தங்களின் கோபத்தை வாக்களிப்பதில் காண்பிப்பார்கள்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 'தோழமை கட்சிகள் அமைதியாக இருக்கும் காலம் முடிந்துவிட்டது' மாணிக்கம் தாகூர் எம்.பி.

மதுரை, ஜன.27

மதுரையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தி.மு.க. நிர்வாகி கோ.தளபதி, "நாங்கள் இல்லாவிட்டால் இந்தியா கூட்டணியே கிடையாது" என்று பேசியதாக கூறப்படுகிறது. இதனை மேற்கோள் காட்டி காங்கிரஸ் எம்.பி. மாணிக்கம் தாகூர் 'எக்ஸ்' தளத்தில் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது;



"இந்த முறை மதுரை வடக்கு தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளர் நிற்க வேண்டும் என்று அன்புத் தலைவர் கார்கேவிடம் கோரிக்கை வைப்பேன். தன்மானம் காக்க சிலருக்கு பாடம் புகட்ட வேண்டும். அதிகார திமிருடன் இருந்தால் தோழமை கட்சிகள் அமைதியாக இருக்கும் காலம் முடிந்துவிட்டது."

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.


# தமிழ்நாட்டைச் சேர்ந்த 13 பேர் உட்பட 131 பேருக்கு பத்ம விருதுகள் செல்வப்பெருந்தகை வாழ்த்து

சென்னை, ஜன.27

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;

கலை, அறிவியல், சமூக சேவை, மருத்துவம், இலக்கியம்,விளையாட்டு என பல்வேறு துறைகளில் தலைசிறந்து தங்களது பங்களிப்பை நல்கிய தமிழ் நாட்டைச் சேர்ந்த 13 பேர் உட்பட 131 பேருக்கு நடப்பாண்டிற்கான பத்ம விருதுகள் மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. விருது பெற்ற அனைவரையும் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

இதில் தமிழகத்தைச் சேர்ந்த பிரபல இரைப்பை குடலியல் மருத்துவ நிபு



ணர் கே.ஆர். பழனிச்சாமிக்கு பத்ம விருது அறிவிக்கப்பட்டிருப்பது மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது. இத்துறையில் மகத்தானசாதனைகள்படைத்து வருகிற அவருக்கு இவ்விருது மிகவும் பொருத்தமானதாகும். அவரது பணி மேலும் சிறக்க தமிழ்நாடு காங்கிரஸ் சார்பாக மனதார வாழ்த்துகிறேன்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# பத்திரப்பதிவின்போது அசல் ஆவணங்களை தாக்கல் செய்யும் மசோதா ஜனாதிபதி ஒப்புதல்

புதுடெல்லி, ஜன.27

பத்திரப்பதிவின் போது சம்பந்தப்பட்ட சொத்தின் அசல் ஆவணங்கள் தாக்கல் செய்வதை கட்டாயமாக்கும் தமிழ்நாடு அரசின் மசோதாவுக்கு ஜனாதிபதி ஒப்புதல் அளித்துள்ளார். அந்த மசோதாவில், பத்திரப்பதிவு செய்யப்படும் சொத்து மூதாதையர் சொத்தாக இருந்து மூலப்பத்திரம் இல்லையெனில் வருவாய்த்துறையின் பட்டாவை சமர்ப்பிக்க வேண்டும் எனவும், சொத்து அடமானத்தில் இருந்தால் அடமானம் பெற்றவரிடம் இருந்து தடையில்லா சான்று பெற்று சமர்ப்பிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், அசல் ஆவணங்கள் தொலைந்து போயிருந்தால், காவல்துறையில் புகாரளித்து 'கண்டறியமுடியவில்லை' என்ற சான்றிதழ் பெற வேண்டும் என்றும், உள்ளூர் நாளிதழில் விளம்பரம் செய்து அதனையும் தாக்கல் செய்ய வேண்டும் என்றும் அந்த மசோதாவில் கூறப்பட்டுள்ளது.

# காலிப்பணியிடங்களை நிரப்புவதில் மட்டுமல்ல, குறிப்பிடுவதிலும் அக்கறையில்லாத திமுக அரசு: நயினார் நாகேந்திரன் குற்றச்சாட்டு

சென்னை, ஜன.27

தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;

தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியத்தின் வருடாந்திர தேர்வு அட்டவணையில் காலிப்பணியிடங்களின் எண்ணிக்கையைக் கூட குறிப்பிடாமல் கண் துடைப்புக்காக ஒரு அறிக்கையைத் திமுக அரசு வெளியிட்டிருப்பது அதிர்ச்சியளிக்கிறது.

ஆசிரியர் தகுதித் தேர்வுகளை முறையாக நடத்துவதில்லை, 2011க்கு முன்னர் பணியில் இணைந்த ஆசிரியர்களுக்குச் சிறப்பு தகுதித் தேர்வு நடத்தவில்லை, இடைநிலை ஆசிரியர்களுக்கு சம ஊதியம் வழங்குவதில்லை, பகுதி நேர ஆசிரியர்களைப் பணிநிரந்தரம் செய்வதில்லை என நான்கரை ஆண்டுகளாக ஆசிரியர்



கள் நலனை வதைத்த திமுக அரசு, ஆட்சி முடியும் தருவாயில், ஒரு படி மேலே சென்று தேர்வு அட்டவணையை வெளியிடுவதிலேயே மெத்தனமாக செயல்பட்டுள்ளது.

கல்வித்துறையின் அச்சாணியான ஆசிரியப் பணியிடங்களை நிரப்புவதில் அக்கறையின்றி செயல்பட்டு, கல்வியில் சிறந்த தமிழ்நாட்டை கல்வியில் சீரழிந்த தமிழ்நாடாக மாற்றிவரும் திமுக அரசுக்கு வரும் தேர்தலில் தக்க பாடம் புகட்டப்படும்!

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அறையில் உட்கார்ந்து அரசியல் செய்யும் விஜய், களத்திற்கு வர வேண்டும் செல்லூர் ராஜூ



மதுரை, ஜன.27

மதுரையில் அதிமுக முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜு செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் பேசியதாவது;

"நடிகர் என்ற முகத்தை வைத்து வெற்றி பெறலாம் என நினைக்கிறார்கள். நடிகர் என்பதால் கூட்டம் கூடுகிறது. நடிகர் என்ற மாஸ் மட்டுமே எடப்பாடிக்கு இல்லையே தவிர, மக்கள் எங்களுக்காக கூடுகிறார்கள். விஜய் அறையில் உட்கார்ந்து அரசியல் செய்கிறார், களத்தில் இறங்கி வேலை பார்க்க வேண்டும்.

ஒவ்வொரு வீட்டிலும் தவெகவுக்கு வாக்கு இருப்பதாக விஜய் கூறுவது வாயில் வடை சுடுவதை போன்றது. குடும்பத்தில் ஒரு ஓட்டு உள்ளது என எத்தனை வீடுகளில் விஜய் கணக்கெடுத்தார்? புதுமுகம் ஒருவர் அரசியலுக்கு வருகிறார் என நினைத்தேன். ஆனால் விஜய் எங்கள் காதை கடிக்கிறார். ஆதவ் அர்ஜுனாவை வைத்துக்கொண்டு ஊழல் பற்றி விஜய் பேசுவது வேடிக்கையான விஷயம். தமிழ்நாட்டில் அதிமுகதிமுக இடையேதான் போட்டி." இவ்வாறு அவர் பேசினார்.

# திருவாரூர் மாவட்டத்திற்கு 28ம் தேதி உள்ளூர் விடுமுறை

சென்னை, ஜன.27

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடியில் பிரசித்தி பெற்ற ராஜகோபாலசாமி கோவில் உள்ளது. ஆண்டு முழுவதும் பெருமாளுக்கு உற்சவம் நடக்கும் கோவிலாக இந்த கோவில் உள்ளது. சுமார் 23 ஏக்கர் பரப்பளவில் இந்த கோவில் உள்ளது.

இந்த கோவிலில் கடந்த 2010ம் ஆண்டு குடமுழுக்கு நடந்தது. தற்போது கோவிலில் குடமுழுக்கு நடத்த முடிவு செய்யப்பட்டு தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜாவின் முயற்சியால் 4 ராஜகோபுரங்களை புதுப்பிக்க நிதி ஒதுக்கி முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார். கடந்த ஆண்டு ஜூலை மாதம் கோவிலில் குடமுழுக்கு திருப்பணிக்கு பாலாலயம் நடைபெற்று திருப்பணி தொடங்கியது.

அதனை தொடர்ந்து ராஜகோபுரங்களை புதுப்பிக்கும் பணிகள் உள்ளிட்ட மற்ற திருப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று முடிவடைந்துள்ளது. அரசு நிதி மற்றும் கொடையாளர் நிதி என சுமார் ரூ.16 கோடி செலவில் ராஜகோபுரம் உள்ளிட்ட 16 கோபுரங்கள் 18 விமானங்கள் 24 சன்னதிகள் புதுப் பிக்கப்பட்டுள்ளன.

கோவிலின் முன்புறம் முழுவதும் பேவர் பிளாக் கற்கள் கொண்டு தளம் அமைக்கப்பட்டுள்ளது. உட்புறம் வளாகத்திலும் கருங்கல் கொண்டு தளம் அமைக்கப்பட்டுள்ளது. கோபுரங்கள், சன்னதிகளுக்கு புது வர்ணங்கள் பூசப்பட்டு, வண்ண மின் விளக்குகள் அலங்காரத்தில் புதுப்பொலிவுடன் கோவில் காட்சியளிக்கிறது.

15 ஆண்டுகள் கழித்து குடமுழுக்கு நடைபெற உள்ளதால் மன்னார்குடி மட்டுமின்றிசுற்றுவட்டார மாவட்டங்கள் தமிழகத்தில் பல பகுதிகளில் இருந்தும்

ஆயிரக்கணக்கான பக்தர்கள்திரண்டுவருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. 16 கோபுரங்களிலும் மேலே உள்ள கலசங்களுக்கு குடமுழுக்கு செய்வதற்காக சாரம் கட்டும் பணிகள் நிறைவடைந்துள்ளது. குடமுழுக்கையொட்டி கோவில் முன்புறம் இரு பக்கமும் கருங்கல் யானை சிற்பங்கள் அழகுற வடிமைக்கப்பட்டு நிறுவப்பட்டுள்ளன.

குடமுழுக்கை காண வரும் பக்தர்கள் வசதிக்காக விரிவான ஏற்பாடுகளை கோவில் நிர்வாகம், நகராட்சி நிர்வாகம், வருவாய்த்துறை போலீசார் இணைந்து செய்துள்ளனர். பொதுமக்களுக்கு குடிநீர், கழிவறை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளன. பாதுகாப்பு ஏற்பாடுகளும் விரிவாக செய்யப்பட்டுள்ளன.

இந்த நிலையில், ராஜ கோபாலசுவாமி திருக்கோவில் குடமுழுக்கு வரும் 28ம் தேதி நடைபெற உள்ள நிலையில், திருவாரூர் மாவட்டத்திற்கு நாளை மறுநாள் (புதன்கிழமை) உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. விடுமுறையை ஈடுசெய்யும்பொருட்டு07.02.2026 சனிக்கிழமை அன்று வேலை நாளாக அறிவித்து மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டுள்ளார்.

# தம்பி விஜய்க்கு அனுபவம் பத்தாது: தமிழிசை சவுந்தரராஜன்

சென்னை, ஜன.27

சென்னையில் பாஜக மூத்த தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:

தம்பி விஜய்க்கு கொஞ்சம் அனுபவம் பத்தாது; தனித்து விடப்பட்டதால் அதிமுக சரணடைந்ததாக பேசுகிறாரா என தெரியவில்லை. ஒரு சின்ன தம்பி பேசுவதாக தான் நான் பார்க்கிறேன். விஜய் பேசுவதால் தேசிய ஜனநாயக கூட்டணி குறைந்துபோய்விடாது. நாங்கள் வெற்றி பெறுவோம்.



திமுக மற்றும் என்.டி.ஏ. இடையேதான் போட்டி. விஜய் ஜீரோ மாதிரி; ஜீரோ தனியாக இருந்தால் மதிப்பில்லை; இன்னொரு எண்ணுடன் இருந்தால் தான் வேல்யூ. 2026ல் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சிக்கு வந்தால் விஜய் நிம்மதியாக அரசியல் செய்யலாம். ஒரு வேளை திமுக ஆட்சிக்கு வந்தால் கரூர் சம்பவத்தை நினைவில் வைக்க வேண்டும்.

திரைத்துறையில் இருந்து வந்த உடனே முதல்அமைச்சர் ஆவது கடினம். அரசியலில் அனுபவம் இல்லாததால் விஜய் யுடன்யாரும்கூட்டணிக்கு செல்லவில்லை; அதை அவர் புரிந்து கொள்ள வேண்டும். எந்த கூட்டணி தேர்தலில் வெற்றி பெறுகிறதோ அந்த கூட்டணிக்கு விஜய் ஆதரவாக இருக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# பிரார்த்தனை நிறைவேறியதால் வீரமாகாளியம்மன் கோவிலில் கிடாவெட்டி விருந்து வைத்த இஸ்லாமிய தம்பதி

தஞ்சாவூர், ஜன.27

தஞ்சாவூர் விளார் சாலை, நாவலர் நகரில் மளிகை கடை நடத்தி வருபவர் ஜாகிர்உசேன் (வயது52). இவரது மனைவி தன்சிலா (48). இவர்களது மகன் பாரீஸ் கான் (27) பி.இ.பட்டதாரி. பாரீஸ் கான் உடல் நலம் பாதிக்கப்பட்டு இருந்தார். இவரதுநிலைமையை அறிந்த நாவலர் நகர் பகுதியைச் சேர்ந்தவர்கள் ஜாகிர் உசேனுக்கு ஆறுதல் கூறியதோடு, அந்த பகுதியில் பிரசித்தி பெற்று விளங்கும் வீரமாகாளியம்மன் கோவிலில்,பிரார்த்தனை



செய்து கொள்ளுமாறு கூறினர்.

அதே போல் ஜாகிர் உசேன் குடும்பத்தினரும் மனம் உருகி வீரமாகாளியம்மன் கோவிலுக்கு சென்று வேண்டி கொண்டுள்ளனர். வேண்டுதல் படி, ஜாகிர் உசேனின் மகன் பூரண குணமடைந்து வீடு திரும்பியதால், வேண்டுதலை நிறைவேற்ற முடிவு செய்தார்.

அதன்படி வீரமாகாளியம்மன் கோவிலில் ஜாகிர்உசேன் குடும்பத்தினர் பொங்கல் வைத்து, படையலிட்டு, பின்னர் கிடா வெட்டி அந்த பகுதியைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்டவர்களுக்கு கறி விருந்து பரிமாறி தனது நேர்த்தி கடனை நிறைவேற்றினார். இந்த சம்பவம் அப்பகுதியில் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

# அரசியலமைப்பின் மாண்பைக் காக்க இந்நாளில் உறுதியேற்போம் விஜய்

சென்னை, ஜன.27

நாட்டின் 77வது குடியரசு தின விழா கொண்டாடப்பட்டு வருகிறது. குடியரசு தினத்தை முன்னிட்டு, நாட்டு மக்களுக்கு அரசியல் தலைவர்கள் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். இந்த நிலையில், குடியரசு தினத்தையொட்டி, தவெக தலைவர் விஜய் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது;

"வேற்றுமையில் ஒற்றுமை கொண்ட இந்தியக் குடியரசு உருவாகக் காரணமான அனைவரையும் நினைவுகூர்ந்து போற்றுவோம். இந்திய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த நாளான குடியரசு நாளில், அரசியலமைப்பின் மாண்பைக் காக்க உறுதியேற்போம். அனைவருக்கும் இனிய குடியரசு தின நல்வாழ்த்துகள்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# திடீர் வெள்ளப்பெருக்கு: மணிமுத்தாறு அருவியில் குளிக்க தடை

நெல்லை, ஜன.27

குமரிக்கடல் பகுதிகளில் இருந்து வடக்கு கேரள கடலோரப்பகுதிகள் வரை கீழடுக்கு வளிமண்டல காற்றலை நிலவுகிறது. இதன் காரணமாக தமிழகத்தின் பல்வேறு இடங்களில் பரவலாக மழை பெய்தது. இதற்கிடையில், தமிழகத்தில் இன்று (திங்கட்கிழமை) லேசானது முதல் மிதமான மழை பெய்யும் என்று தென் மண்டல வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், நெல்லை மாவட்டம் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் நேற்று இரவு அதிக அளவு மழை பெய்ததால் மணிமுத்தாறு அருவியில் திடீரென வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் பாதுகாப்பு கருதி மணிமுத்தாறு அருவியில் சுற்றுலா பயணிகள்குளிப்பதற்குவனத்துறையினர்தடைவிதித்துள்ளனர்.

இந்த அறிவிப்பால் சுற்றுலா பயணிகள் ஏமாற்றத்துடன் திரும்பிச்சென்றனர். நீர்வரத்தை அதிகாரிகள் கண்காணித்து வருகின்றனர். எனினும் அருவியைப் பார்வையிட சுற்றுலா பணிகளை அனுமதிக்கப்பட்டுள்ளது.

# கோவை: சேற்றில் சிக்கிய காட்டு யானை, 3 மணி நேரம் போராடி மீட்பு



கோவை, ஜன.27

கோவை மாவட்டம் மாதம்பட்டி அருகே உள்ள குப்பனூர் கிராமத்தில் வனப்பகுதியை விட்டு வெளியேறிய வயதான பெண் காட்டு யானை கடந்த 3 நாட்களுக்கு முன்பு புகுந்தது. அந்த யானை அங்குள்ள விவசாய விளைநிலங்களுக்குள் புகுந்து பயிர்களை சேதப்படுத்தி வந்தது.

இந்த நிலையில் நேற்று அதிகாலை குப்பனூரில் உள்ளகுடியிருப்பைஒட்டி இருக்கும் கே.ஆர்.எஸ். கால்வாய் பகுதிக்கு அந்த யானை வந்தது. இது குறித்து தகவல் அறிந்த வனத்துறையினர் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்தனர். அவர்கள் ஜீப்பில் சென்றவாறு அந்த யானையை துரத்தினர். வயதானதால் அந்த யானையால் வேகமாக நடக்க முடியவில்லை. அது மெதுவாக அங்கிருந்து நடந்து சென்றது. அப்போது அந்தப்பகுதியில் உள்ள ஒரு தோட்டம் வழியாக சென்றது. அந்த தோட்டத்தில் ஒரு கிணற்றை மூடுவதற்காக அதன் உரிமையாளர் மண் மற்றும் குப்பைகளை போட்டு நிரப்பி வைத்து இருந்தார். இன்னும் சில அடி ஆழத்துக்கு மட்டுமே அந்த கிணற்றை நிரப்ப வேண்டி இருந்தது.

சேறும், சகதியுமாக இருந்த அந்த பள்ளத்தை அந்த யானை கடக்க முயன்றபோது அதில் வசமாக சிக்கிக்கொண்டது. யானையின் 4 கால்களும் சேற்றில் சிக்கியதால் வெளியே வரமுடியவில்லை. அதில் இருந்து மீண்டு வர அந்த யானை கடுமையாக முயன்றும் முடியவில்லை. இதன் காரணமாக அந்த யானை பிளிறியது.சோர்வடைந்து சேற்றிலேயே அது படுத்துக்கொண்டது. இது குறித்து உயர் அதிகாரிகளின் உத்தரவின்பேரில் அந்த யானையை சேற்றில் இருந்து மீட்க 3 பொக்லைன் எந்திரங்கள் மற்றும் சிறிய அளவிலான கிரேன் சம்பவ இடத்துக்கு வரவழைக்கப்பட்டது.

பின்னர் அந்த யானையை சுற்றிலும் இருந்த சேற்றை பொக்லைன் எந்திரம் மற்றும் கிரேன் மூலம் அப்புறப்படுத்தும் பணி நடந்தது. இந்த மீட்பு பணி காலை 8 மணிக்கு தொடங்கியது. தொடர்ந்து 3 மணி நேரம் போராடி வனத்துறையினர் அந்த யானையை சேற்றில் இருந்து மீட்டனர்.

சேற்றுக்குள் 3 மணி நேரம் அந்த யானை தத்தளித்தபடி இருந்ததால் மிகவும் சோர்வாக காணப்பட்டது. கால்நடை டாக்டர்கள் சிகிச்சை அளித்தனர். அத்துடன் யானைக்கு உணவு மற்றும் குளுக்கோஸ் வழங்கப்பட்டது. இருந்தபோதிலும் அந்த யானையால் நிற்க முடியவில்லை. இதையடுத்து வனத்துறையினர் பொக்லைன் எந்திரம் மூலம் யானையின் வயிற்றில் பெல்ட் கட்டி அதை தூக்கி நிறுத்தினர். அந்த யானையை சாடிவயல் முகாமுக்கு கொண்டு செல்லலாமா அல்லது வனப்பகுதியில் விடலாமா என்று வனத்துறை உயர் அதிகாரிகள் ஆலோசனை நடத்தி வருகின்றனர்.

# திருமணமான 3வது நாளில் பணம், நகையுடன் புதுப்பெண் ஓட்டம் கணவர் போலீசில் புகார்

தூத்துக்குடி ஜன.27

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் அருகே உள்ள ராமசாமிபுரம் பகுதியை சேர்ந்தவர் பாஸ்கர் (35 வயது). பழ வியாபாரம் செய்து வருகிறார். இவர் சாத்தான்குளத்தை சேர்ந்த திருமண புரோக்கர் மூலம் தஞ்சாவூரை சேர்ந்த ஆதரவற்ற இளம்பெண் என்று கூறி பெண் ஒருவரை கடந்த 20ந்தேதி திருச்செந்தூர் துர்க்கை அம்மன் கோவில் முன்பு 4 கிராம் தங்கதாலியை கட்டி திருமணம் செய்து கொண்டார்.

கடந்த 22ந்தேதி பாஸ்கர் வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்கிவிட்டு வந்து பார்த்தபோது வீட்டில் இருந்த ரூ.10 ஆயிரம் மற்றும் புதிதாக வாங்கிய துணிகளையும் காணவில்லை. அப்போதுதான் மனைவி கட்டிய தாலி, வீட்டில் இருந்த ரூ.10 ஆயிரம் மற்றும் துணிகளுடன் ஓட்டம் பிடித்தது தெரியவந்தது. இதுகுறித்து அவர் திருச்செந்தூர் தாலுகா போலீசில் புகார் அளித்தார். அதன் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# எடப்பாடி பழனிசாமியுடன் டிடிவி தினகரன் கூட்டணி சேர்ந்தது வெட்கக்கேடு: அமைச்சர் ரகுபதி



புதுக்கோட்டை, ஜன.27

புதுக்கோட்டையில் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் ரகுபதி நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

தேசிய ஜனநாயக கூட்டணி பலவீனமான கூட்டணியாகும். எத்தனைகட்சிகள் அந்த கூட்டணியில் வந்து சேர்ந்தாலும் தி.மு.க.வின் மதசார்பற்ற முற்போக்குகூட்டணியை யாராலும் எதுவும் செய்ய முடியாது. திராவிட மாடல் ஆட்சி தொடர மக்கள் விரும்புகின்றனர்.

தமிழ்நாட்டு மக்களின் மனதில் யார் இருக்கிறார்களோ அவர்கள் தான் வெல்ல முடியுமே தவிர கூட்டத்தைக் கூட்டி யாராலும் வெல்ல முடியாது. தமிழ்நாட்டின் மக்களின் மனநிலையை இன்றைக்கு ஒவ்வொரு சர்வே மூலமாக நாங்கள் அறிந்து வருகிறோம். மீண்டும் திராவிட மாடல் ஆட்சி 2.0 தொடர வேண்டும்.

11 முறை தேர்தலில் தோல்வியடைந்த எடப்பாடி பழனிசாமிக்கு 12 வது தோல்வியை 2026 தேர்தல் நிச்சயமாக தரும். எடப்பாடி பழனிசாமியை டி.டி.வி. தினகரன் விமர்சனம் செய்து பேசிவிட்டு மீண்டும் கூட்டணி சேர்ந்துள்ளது வெட்கக்கேடு. நாங்கள் எப்போதும் எதிரிகள் இல்லை என்று சொல்லக்கூடிய அளவுக்கு இறுமாப்பு கொண்டவர்கள் கிடையாது. எதிரிகள் இருக்கிறார்கள்,

ஆனால் எங்களோடு மோதும் அளவிற்கு அவர்கள்வலிமையாகஇல்லை. தேர்தல் என்று வந்து விட்டால் மக்கள் தான் தீர்மானிக்க வேண்டும். நாங்கள் சொன்னதை செய்துள்ளோம். மகளிர் உரிமைத் தொகை தருகிறோம் என்று கூறினோம். எங்கள் வெற்றிக்கான கவுண்ட்டவுன் ஸ்டார்ட் ஆகிவிட்டது. இவ்வாறு அவர் கூறினார்.


# திருப்பத்தூர்: கணவருடன் சேர்த்து வைக்கக்கோரி கைக்குழந்தையுடன் காவல் நிலையம் முன் இளம்பெண் தர்ணா

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை அடுத்த பொன்னேரி பகுதியை சேர்ந்த அகிலா (27). இவர் டெக்னீசியன் படித்து தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வந்துள்ளார். இந்த நிலையில் ஜோலார்பேட்டை இடையம்பட்டி பகுதியை சேர்ந்த தியாகராஜன் (42) என்பவரை காதலித்து இருவீட்டார் சம்மதத்துடன் திருமணம் செய்து கொண்டார். தியாகராஜனுக்கு இரண்டு அக்காள் உள்ள நிலையில் அவர்களுக்கு திருமணம் ஆகாததால் இவர்களின் திருமணத்திற்கு தந்தை யுவராஜ் சம்மதம் தெரிவிக்கவில்லை என கூறப்படுகிறது.

மேலும் தியாகராஜனை தந்தை யுவராஜ் வீட்டை விட்டு அனுப்பியுள்ளார். இதனால் கணவன், மனைவி இருவரும் இட்லிகடை வைத்து வாழ்ந்து வந்துள்ளனர்.

மேலும் சொகுசு வாழ்க்கை வாழ்ந்த தியாகராஜனுக்கு பணம் பற்றாக்குறை ஏற்பட்டதால் தன் காதல் மனைவி அகிலாவை விட்டு தந்தை யுவராஜ் உடன் சேர்ந்துள்ளார்.

இந்த நிலையில் கர்ப்பமாக இருந்த அகிலாவிற்கு ஒரு பெண் குழந்தை பிறந்த நிலையில் தற்போது தன் குழந்தையை வைத்துகொண்டு மிகவும் கஷ்டப்பட்டு வருவதாகவும், தன்னை தன் காதல் கணவருடன் சேர்த்து வைக்கக் கோரி ஜோலார்பேட்டை காவல் நிலையம் முன்பாக திடீரென அகிலா தன் கைக்குழந்தையுடன் தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டார். இதனை தொடர்ந்து அகிலாவிடம் போலீசார் பேச்சுவார்த்தை நடத்தி சமாதானம் செய்து அனுப்பி வைத்தனர். இதனால் காவல் நிலைய வளாகத்தில் சிறிது நேரம் பரபரப்பான சூழல் காணப்பட்டது


# திருப்பத்தூர்: கணவருடன் சேர்த்து வைக்கக்கோரி கைக்குழந்தையுடன் காவல் நிலையம் முன் இளம்பெண் தர்ணா



திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை அடுத்த பொன்னேரி பகுதியை சேர்ந்த அகிலா (27). இவர் டெக்னீசியன் படித்து தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வந்துள்ளார். இந்த நிலையில் ஜோலார்பேட்டை இடையம்பட்டி பகுதியை சேர்ந்த தியாகராஜன் (42) என்பவரை காதலித்து இருவீட்டார் சம்மதத்துடன் திருமணம் செய்து கொண்டார். தியாகராஜனுக்கு இரண்டு அக்காள் உள்ள நிலையில் அவர்களுக்கு திருமணம் ஆகாததால் இவர்களின் திருமணத்திற்கு தந்தை யுவராஜ் சம்மதம் தெரிவிக்கவில்லை என கூறப்படுகிறது.

மேலும் தியாகராஜனை தந்தை யுவராஜ் வீட்டை விட்டு அனுப்பியுள்ளார். இதனால் கணவன், மனைவி இருவரும் இட்லி கடை வைத்து வாழ்ந்து வந்துள்ளனர்.

மேலும் சொகுசு வாழ்க்கை வாழ்ந்த தியாகராஜனுக்கு பணம் பற்றாக்குறை ஏற்பட்டதால் தன் காதல் மனைவி அகிலாவை விட்டு தந்தை யுவராஜ் உடன் சேர்ந்துள்ளார்.

இந்த நிலையில் கர்ப்பமாக இருந்த அகிலாவிற்கு ஒரு பெண் குழந்தை பிறந்த நிலையில் தற்போது தன் குழந்தையை வைத்து கொண்டு மிகவும் கஷ்டப்பட்டு வருவதாகவும், தன்னை தன் காதல் கணவருடன் சேர்த்து வைக்கக் கோரி ஜோலார்பேட்டை காவல் நிலையம் முன்பாக திடீரென அகிலா தன் கைக் குழந்தையுடன் தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டார். இதனை தொடர்ந்து அகிலாவிடம் போலீசார் பேச்சுவார்த்தை நடத்தி சமாதானம் செய்துஅனுப்பி வைத்தனர். இதனால் காவல் நிலைய வளாகத்தில் சிறிது நேரம் பரபரப்பான சூழல் காணப்பட்டது

# 'பனையூர் பண்ணையார்... ஆகப்பெரும் ஊழல்வாதி' விஜய்யை சாடிய அதிமுக



சென்னை, ஜன.27

தவெக தலைவர் விஜய் தலைமையில் அக்கட்சியின் செயல்வீரர்கள் கூட்டம் இன்று நடைபெற்றது. இதில் திமுக, அதிமுகவை கடுமையாக சாடி விஜய் பேசினார். இந்த நிலையில், இதற்கு அதிமுக பதிலடி கொடுத்துள்ளது.

இதுதொடர்பாக அதிமுக ஐடி விங் வெளியிட்டுள்ள எக்ஸ் தளப்பதிவில் கூறப்பட்டிருப்பதாவது:

பனையூர் பண்ணையார் அவர்களே, ஊழல் என்பது சட்டவிரோதமாக பணம் சம்பாதிக்கும் செயல். அப்படிப் பார்த்தால், சட்டத்திற்கு விரோதமாக, தொடர்ந்து ப்ளாக்கில் டிக்கெட் விற்று அதன் மூலம் பல கோடிகள் கண்ட நடிகர் விஜய் ஆகிய நீங்கள் தான் ஆகப்பெரும் ஊழல்வாதி.

'மத்திய அரசிற்கு அடிமை' என்பது அதிமுகவின் வரலாற்றிலேயே இல்லாத ஒன்று. எப்போதெல்லாம் மாநில நலனுக்கும், உரிமைகளுக்கும்சோதனை வருகிறதோ, அப்போதெல்லாம் தமிழகத்திற்கான உரிமைகளை போராடி பெற்று , மக்களின் நலன்களை வாதாடி பெற்ற இயக்கம், எங்கள் அஇஅதிமுக என்னும் பேரியக்கம் என்பது தான் வரலாறு...!

தன் திரைப்படம் வெளியாக வேண்டுமென அன்றைய முதல்அமைச்சர் வீட்டில் 5 மணி நேரம் கைகட்டி காத்திருந்து , வெளியிட்ட படத்தின் பெயரை நாங்கள் சொல்லவா..?. இல்லை எந்தவிதமான எதிர்பார்ப்பும் இல்லாமல் உதவிய முதல்அமைச்சர் பெயரை நீங்கள் சொல்லுகிறீர்களா..?

ஊழல் என்பது வெறுமனே அரசியலில் பணம் சம்பாதிப்பது மட்டுமல்ல. *Undue influence* மூலம் தனக்கான வருமானத்தைப் பெருக்க அதிகார மையத்திடம் மண்டியிடுவதும் அதே வகை தான் பனையூர்காரரே..! அதிமுகவின் ஆட்சியை ஊழல் ஆட்சி என்று குறைசொல்லிவிட்டு, அந்தாட்சியில்

கல்வி அமைச்சராக இருந்த செங்கோட்டையனை ஒருங்கிணைப்பாளர் என்று பக்கத்திலேயே உட்கார வைத்து கொள்வதுதான், நீங்கள் சொல்லுகின்ற தூயசக்திக்கான விளக்கவுரையா?

நீங்கள் செய்தீர்களோ ? இல்லையோ? ஆனால் கருரில் 41 பேரின் மரணத்திற்கு நீங்களும் ஒரு காரணம் தானே , அதற்கான பிராயசித்தங்களை செய்யாமல், என்ன வழக்கு வரபோகிறதோ என்ற பயத்தில் 72 நாட்களுக்கும் மேல் பனையூரில் பதுங்கி , 15 நாட்கள் கட்சியின் அலுவலகத்தையே மூடிவைத்தீர்களை ? அதுதான் நீங்கள் எவ்வளவு பெரிய வீரர் என்பதற்கான விடை....!

உலக வரலாற்றிலேயே முதன்முறையாக இறந்தவர்கள் வீட்டிற்கு சென்று ஆறுதல் சொல்லாமல் , பனையூரில் வந்து ஆறுதல் வாங்கி செல்ல வைத்தது எல்லாம் வேற லெவெல் பண்ணையார்தனம்...!

இதற்காக உங்களுக்கு டாக்டர்பட்டமே கொடுக்கலாம்...!

கரூர் சென்று கண்ணீரைத் துடைக்காமல், *Glycerin* கண்ணீரோடு , போட்டோக்களை வைத்து பேருக்கு ஒரு அஞ்சலி நிகழ்ச்சி நடத்தி விட்டு குற்ற உணர்வு சிறிது கூட இல்லாமல், அந்த நிகழ்ச்சியிலும் தன்னை *Self Promotion* செய்து கொண்ட *Narcissistic Behaviour* மிகவும் ஆபத்தான அரசியலின் அடையாளம்.

அரசியலில் நல்லவர்களாக இருக்கலாம் , வல்லவர்களாக இருக்கலாம் ஆனால் ஒன்றுமே தெரியாதபுரியாத , தனது ரசிகர்களை கூட ஏமாற்றும் , இன்னும் டைரக்டர் நடிகரவாகவே இருக்கும் தவெக தலைவர் போன்றவராக மட்டும் இருந்துவிட கூடாது ....! நீங்கள் எங்கள் கழகம் குறித்து, மனனம் செய்து ஒப்புவிக்கும் ஒட்டு மொத்தக் கருத்துருவும் ஒன்னாநம்பர்குப்பையே..! அறிவாலய குப்பையோடு, பனையூர் குப்பையையும் கூட்டியெறிந்திடுவோமாக. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# பத்ம விருதுகளுக்கு தேர்வானவர்களுக்கு எல். முருகன் வாழ்த்து



சென்னை, ஜன.27

பத்ம விருதுகள் ஆண்டுதோறும் குடியரசு தினத்தை முன்னிட்டு அறிவிக்கப்படும் இந்தியாவின் உயரிய சிவிலியன் விருதுகளில் ஒன்றாகும். இந்தவிருதுகள் பத்ம விபூஷன், பத்ம பூஷன் மற்றும் பத்மஶ்ரீ ஆகிய மூன்று பிரிவுகளின் கீழ் வழங்கப்படுகின்றன. பொது சேவை மற்றும் முக்கிய துறைகளில் குறிப்பிடத்தக்க சாதனை புரிந்தவர்களை கவுரவிக்க இந்த விருது வழங்கப்படுகிறது.

அந்த வகையில், 2026ம் ஆண்டுக்கான பத்ம விருதுகளை மத்திய அரசு அறிவித்துள்ளது. தமிழகத்தில் மொத்தம் 13 பேருக்கு விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், பத்ம விருதுக்கு தேர்வானவர்களுக்கு மத்திய இணை மந்திரி எல். முருகன் தனது வாழ்த்துகளை தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவுகளில் தெரிவித்திருப்பதாவது;

சிறந்த கல்வியாளரும் மருத்துவருமான கள்ளிப்பட்டி ராமசாமி பழனிசாமிக்கு 'பத்ம பூஷன்' விருது வழங்கப்பட்டிருப்பது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. மனித உடலில், குடல் சார்ந்த நோய்களை எண்டோஸ்கோபி சிகிச்சை மூலம் குணப்படுத்துவதில் வல்லுநராக அறியப்படுபவர், மிகச் சிறந்த கல்வியாளராக சமூகப் பணிகளை ஆற்றி வருகிறார். தேசத்தின் உயரிய விருதுகளில் ஒன்றான 'பத்ம பூஷன்' விருது பெறுகின்ற கள்ளிப்பட்டி ராமசாமி பழனிசாமிக்கு, எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிறந்த சமூக சேவகராக அறியப்படும் மயிலானந்தமுக்கு 'பத்ம பூஷன்' விருது வழங்கப்பட்டிருப்பது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. ஆன்மீகக் கல்வி, பொது சுகாதாரம் மற்றும் சமுதாய முன்னேற்றம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு செயல்படுபவர், தனது சேவைகளின் வழி, யோகா மற்றும் இலவச மருத்துவத்தை ஏறத்தாழ 3000 கிராமங்களுக்கு கொண்டு சேர்த்துள்ளார். தேசத்தின் உயரிய விருதுகளில் ஒன்றான 'பத்ம பூஷன்' விருது பெறுகின்ற மயிலானந்தமுக்கு, எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தில் போலியோ நோய் தடுப்பிற்கான மிக அதிக மருத்துவ முன்னெடுப்புகளை மேற்கொண்டவரும், 4500க்கும் மேற்பட்ட ஆரம்ப சுகாதார மருத்துவ மையங்களை நிறுவ காரணமாக இருந்தவருமான டாக்டர் ஹண்டேவுக்கு 'பத்மஶ்ரீ' விருது வழங்கியிருப்பது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. முன்னாள் முதல்அமைச்சர் எம்ஜிஆரின் அமைச்சரவையில் 10 ஆண்டுகாலம் சுகாதாரத்துறை அமைச்சராகவும், மருத்துவத் துறையில் போலியோ நோய் தடுப்பிற்காக மேற்கொண்ட சேவைகளுக்காவும் இவ்விருது வழங்கப்பட்டிருக்கிறது. தேசத்தின் உயரிய விருதுகளில் ஒன்றான 'பத்மஶ்ரீ' விருது பெறுகின்ற டாக்டர் ஹண்டேவுக்கு, எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அனுபவம் மிகுந்த ஐபிஎஸ் அதிகாரியும், தமிழக காவல் துறையில் மிகச் சிறப்பான பணிகளை ஆற்றியவருமான விஜயக்குமாருக்கு, 'பத்மஶ்ரீ' விருது வழங்கப்பட்டிருப்பது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. அடர்வனம் மிகுந்த சவாலான பகுதியில், மாவோயிஸ்ட் குற்றவாளிகளை அடக்குவதில் திறம்பட செயல்பட்டார். தேசத்தின் உயரிய விருதுகளில் ஒன்றான 'பத்மஶ்ரீ' விருது பெறுகின்ற விஜயக்குமாருக்கு, எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்

புகழ்பெற்ற வேளாண் விஞ்ஞானியாக அறியப்படும் ராமசாமிக்கு 'பத்மஶ்ரீ' விருது வழங்கப்பட்டிருப்பது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. விவசாயப் பாசன முறை மற்றும் உயிரி எரிவாயு திட்ட மேம்பாடு போன்ற 30க்கும் மேற்பட்ட திட்டங்களை தேசிய அளவில் வழிநடத்திச் சென்றுள்ளார். இயற்கை விவசாயத்திற்காக வேளாண் அறிவியல் முறைப்படி ஆற்றிய பணிகளுக்காக, தேசத்தின் உயரிய விருதுகளில் ஒன்றான 'பத்மஶ்ரீ' விருது பெறுகின்ற ராமசாமிக்கு, எனது மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன். இலக்கியம் மற்றும் கல்வித் துறையில் மிகச் சிறந்த எழுத்தாளராக அறியப்படும் சிவசங்கரிக்கு 'பத்மஶ்ரீ' விருது வழங்கப்பட்டிருப்பது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. 30 நாவல்கள் மற்றும் 150க்கும் மேலான சிறுகதைகளை இயற்றியுள்ளார். ஏறத்தாழ அரை நூற்றாண்டு காலமாக, தனது எழுத்துக்களின் வழி பாமர மக்களின் உணர்வு, உறவு முறை மற்றும் வாழ்க்கை நெறிமுறைகள் பற்றி எழுதியமைக்காக, தேசத்தின் உயரிய விருதுகளில் ஒன்றான 'பத்மஶ்ரீ' விருது பெறுகின்ற சிவசங்கரிக்கு, எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தின் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த புகழ்பெற்ற சிற்பக் கலைஞர் ராஜ ஸ்தபதி கலியப்ப கவுண்டருக்கு, "பத்மஶ்ரீ" விருது அறிவிக்கப்பட்டிருப்பது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. சிறுவயது முதலே ஓவியக் கலை மீதிருந்த ஆர்வத்தின்பால், சிற்பக் கலை நோக்கி கவனம் செலுத்தியவர், ஏறத்தாழ அரை நூற்றாண்டு காலமாக இக்கலையினை ஊக்குவித்து வருகிறார். தேசத்தின் உயரிய விருதுகளில் ஒன்றான "பத்மஶ்ரீ" விருது பெறுகின்ற அய்யாவுக்கு, எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தின் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த, கால்நடை விஞ்ஞானி புண்ணியமூர்த்தி நடேசனுக்கு, "பத்மஶ்ரீ" விருது அறிவிக்கப்பட்டிருப்பது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. கால்நடைகளுக்கு ஏற்படும் நோய் தொற்று போன்ற பாதிப்புகளை, பாரம்பரிய தமிழ் முறைப்படி சிகிச்சை மேற்கொண்ட பாதுகாத்த அய்யா "பத்மஶ்ரீ" விருது பெறுகிறார். அவருக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தின் திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த புகழ்பெற்ற மிருதங்க இசை வாத்தியக் கலைஞரான பக்தவச்சலமுக்கு, "பத்மஶ்ரீ" விருது அறிவிக்கப்பட்டிருப்பது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. தஞ்சாவூர் பாணியில், மிகவும் ஆற்றல்மிக்க மிருதங்க வாசிப்புக் கலைஞரான அய்யா, கலைத் துறையில் சாதித்தமைக்கான "பத்மஶ்ரீ" விருது பெறுகிறார். அவருக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினகனி

NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253

27.01.2026

# 23 தங்க பதக்கங்கள் பெற்று சாதனை படைத்த அருணேஸ்வரன்: அமைச்சர் ரூ.1 லட்சம் வழங்கி பாராட்டு



சென்னை, ஜன.27

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது;

தர்மபுரி மாவட்டம், பாப்பிரெட்டிபட்டி வட்டம், கோபாலபுரத்தில் அமைந்துள்ள சுப்ரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கணக்குப்பிரிவில் எழுத்தராக பணியாற்றி வரும் கே.கே.இளங்கோவின் மகனாகிய இ.எல்.அருணேஸ்வரன், இளங்கலை கால்நடை மருத்துவ படிப்பை, நாமக்கல் கால்நடை மருத்துவ கல்லூரியில் 20182024 கல்வியாண்டில் பயின்றார். மேலும், தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக்கழகத்தின் மூலம் 24.01.2026 அன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் 23 தங்க பதக்கங்கள் பெற்று சாதனை படைத்தார்.

தமிழ்நாடு முதல்அமைச்சரின்ஆணைக்கிணங்க, எளிய பின்னணியில் இருந்து படித்து சாதனை படைத்த இ.எல்.அருணேஸ்வரனை பாராட்டும் வகையில் சுற்றுலா மற்றும் சர்க்கரைத் துறை அமைச்சர் ரா.இராஜேந்திரன் இன்றைய தினம் துறையின் சார்பாக அழைத்து பாராட்டுதலையும், வாழ்த்துகளையும் தெரிவித்து, அரூர் சுப்ரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலையின் மூலம் ரூ.1 லட்சத்திற்கான காசோலையினை வழங்கி ஊக்கப்படுத்தினார்.

இந்நிகழ்வின்போது, சுப்ரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலையின் சார்பாக ஆர்.பிரியா, மாவட்ட வருவாய் அலுவலர் / செயலாட்சியர் சி.தனராஜ், தொழிலாளர் நல அலுவலர் மற்றும் து.முருகேசன், கணக்கு அலுவலர் மற்றும் மாணவரின் குடும்பத்தினர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அழுத்தத்திற்கு அடங்கிப்போகும் ஆள் நான் இல்லை: விஜய் பரபரப்பு பேச்சு



தவெக செயல் வீரர்கள் கூட்டத்தில் விஜய் பேசியதாவது:

மிக முக்கியமான காலகட்டத்தில் நாம் இருக்கிறோம் என்பதை அழுத்தமாகச் சொல்லிக் கொள்கிறேன். நமக்கு ஏதாவது அழுத்தம் இருக்குமோ என்று நினைக்கிறீர்களா? அழுத்தமா? நமக்கா? அதெல்லாம் இல்லை. இந்த மாதிரி அழுத்தங்களுக்கு எல்லாம் அடங்கிப் போகிற ஆளா நான்?

அழுத்தம் இருக்கிறதா என்று கேட்டால், அழுத்தம் உள்ளது; ஆனால் நமக்கு இல்லை. மக்களுக்கு இருக்கிறது. மாற்றி மாற்றி ஏமாந்த மக்கள் அழுத்தத்தில் இருக்கின்றனர். தவெகவை மக்கள் நம்புகின்றனர். அடிமையாக இருக்க நான் அரசியலுக்கு வரவில்லை.விஜய் இப்போதுதான் வந்திருக்கிறார். இவருடன் யார் வரப்போகிறார்கள் என்று நம்மை குறைத்து மதிப்பிடுகிறார்கள். 30 வருடங்களாக நம்மை குறைத்து மதிப்பிடுகிறார்கள். ஆனால் மக்கள் நம்மை சரியாக மதிப்பிடுகிறார்கள்.

ஊழல் செய்யவே மாட்டேன். ஒரு பைசாவையும் தொட மாட்டேன். எனக்கு அதைத் தொட வேண்டிய அவசியம் இல்லை. ஒரு துளி ஊழல் கூட படிய விட மாட்டேன். மக்கள் எனக்கென்று. பாஜகவிடம் அதிமுக நேரடியாக சரண் அடைந்துவிட்டது.திமுக தீய சக்தி. தவெக மீது மக்களுக்கு நம்பிக்கை வரும் வகையில் கட்சியினர் செயல்பட வேண்டும் என்ன சூழ்ச்சி செய்தாலும் அழுத்தம் கொடுத்தாலும் அடங்கிப் போக மாட்டேன்.

தப்பு செய்தால் யாராக இருந்தாலும் தப்பிக்கவே முடியாது என்ற பயம் இருக்க வேண்டும். தயவு செய்து எல்லோரும் ஒற்றுமையாக இருந்து வேலை செய்ய வேண்டும். யாருக்காகவும், எதற்காகவும் நம் அரசியலை நாம் சமரசம் செய்து கொள்ளக் கூடாது. ஆளுங்கட்சிக்கு மற்றும் ஆண்ட கட்சிக்கு பூத் என்றால் என்ன தெரியுமா? கள்ள ஓட்டு போடும் இடம். நடைபெறவுள்ள தேர்தல் ஒரு ஜனநாயகப் போர்; இந்த ஜனநாயகப் போரில் முன்னணியில் நிற்கக் கூடிய நீங்கள்தான் தளபதிகள். முழித்துக் கொண்டிருக்கும்போதே முழியை தோண்டி எடுத்துச் செல்லக்கூடியது இந்த தீய சக்தி"

இவ்வாறு அவர் பேசினார்.

# தேர்தல் ஆணையத்தில் விஜய் ரசிகர்கள்: ஆதவ் அர்ஜூனா பேச்சு



சென்னை, ஜன.27

தவெக செயல்வீரர்கள் கூட்டத்தில் தவெக நிர்வாகி ஆதவ் அர்ஜூனா பேசியதாவது:

2016ல் தனித்து நின்று ஜெயலலிதா ஆட்சி அமைத்தது போல, 2026ல் விஜய் ஆட்சி அமைப்பார். தேர்தல் ஆணையத்தில் உள்ள விஜய் ரசிகர்கள்தான் கையெழுத்திட்டு விஜய்க்கு 'விசில்' சின்னத்தை ஒதுக்கியுள்ளனர். தலைவர் தைரியத்தாலோ அல்லது அன்பாலோ உருவாவதில்லை; தியாகத்தால் உருவாக்கப்படுவார். நீட், ஜிஎஸ்டி, இந்தி மொழி எது வந்தாலும் முதல் எதிர்ப்பு எங்களிடமிருந்துதான் வரும்.

சிபிஐ அலுவலகம் சென்றால் அங்கும் விஜய்யைப் பார்க்க மக்கள் வருகிறார்கள். யார் அமைதியாக இருக்கிறார்களோ, அவர்கள்தான் தைரியமாக இருக்கிறார்கள் என்பதற்கான அர்த்தம் அது. திருமாவை அடியாளாக திமுக பயன்படுத்துகிறது. திமுக ஆட்சியில் ஊழல் இல்லை என்று திருமாவளவன் சொல்ல முடியுமா? திருமாவளவன் கட்சியில் மொத்தமே 20 பேர்தான் உள்ளனர். கொள்கை ரீதியாக பாஜகவை எங்கு எதிர்க்க வேண்டுமோ, அங்கு எதிர்ப்போம்" என்றார்.

# அதிர்ச்சி சம்பவம்: வீடு புகுந்து தாக்கி மூதாட்டியை பாலியல் பலாத்காரம் செய்த வாலிபர்



வேலூர், ஜன.27

வேலூர் மாவட்டம் குடியாத்தத்தை அடுத்த பெரிய பரவக்கல் பகுதியைச் சேர்ந்தவர் அஜித்குமார் (வயது 24). மேளம் அடிக்கும் தொழிலாளியான இவர் மது குடிக்கும் பழக்கத்துக்கு அடிமையாகி இருந்தார். கடந்த 22ந்தேதி ஒரு வீட்டிற்கு சென்ற அவர் அங்கு தனியாக இருந்த 77 வயது மூதாட்டியிடம் செலவுக்கு பணம் கேட்டுள்ளார். அவரிடம் மூதாட்டி பணம் இல்லை என கூறியுள்ளார். இதனால் ஆத்திரம் அடைந்த அஜித்குமார் போதையில் மூதாட்டியை அடித்து துன்புறுத்தி பாலியல் பலாத்காரம் செய்துள்ளார். இதில் மூதாட்டி மயக்கம் அடைந்த நிலையில் அவர் இறந்துவிட்டதாக நினைத்து அஜித் குமார் சென்று விட்டார்.

மறுநாள் காலை மூதாட்டி வீட்டுக்கு உறவினர் சென்றபோது அந்த மூதாட்டி காயத்துடன் இருந்துள்ளார். இதனை அறிந்த அவரது மகள் உடனடியாக அவரது தாயாரை அரசு மருத்துவமனையில் சேர்த்தார். இது தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து அஜித்குமாரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# இன்றைய ராசி பலன்கள் (27.01.2026)

**மேஷம்:** உழைப்புக்கு நல்ல பலன் கிடைக்கும் நாள். அலுவலகத்தில் உங்கள் கருத்துக்கு மதிப்பு இருக்கும். அவசர முடிவுகளைத் தவிர்க்கவும்.

**ரிஷபம்:** பணவரவு சீராக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி. உடல்நலத்தில் சிறு சோர்வு இருக்கலாம்—ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்.

**மிதுனம்:** தகவல் தொடர்பு மூலம் லாபம். புதிய தொடர்புகள் உருவாகும். வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

**கடகம்:** மன அமைதி தேவைப்படும் நாள். வீட்டுச் செலவுகள் கூடலாம். தாயாரின் ஆலோசனை உதவும்.

**சிம்மம்:** தன்னம்பிக்கை உயரும். தலைமைப் பொறுப்புகள் கிடைக்க வாய்ப்பு. அகந்தையை கட்டுப்படுத்துங்கள்.

**கன்னி:** திட்டமிட்டு செயல்பட்டால் வெற்றி. கடன் தொடர்பான விஷயங்களில் கவனம். உடல்நலத்தில் முன்னேற்றம்.

**துலாம்:** நட்பு மற்றும் கூட்டாண்மை மூலம் நன்மை. காதல் விஷயங்களில் தெளிவு வரும். செலவுகளில் கட்டுப்பாடு அவசியம்.

**விருச்சிகம்:** மறைமுக ஆதரவு கிடைக்கும். ஆராய்ச்சி/ஆழ்ந்த சிந்தனை பயன் தரும். கோபத்தை கட்டுப்படுத்துங்கள்.

**தனுசு:** பயணம் அல்லது புதிய வாய்ப்புகள். கல்வி/பயிற்சியில் முன்னேற்றம். நேர மேலாண்மை முக்கியம்.

**மகரம்:** பொறுப்புகள் அதிகரிக்கும். உழைப்புக்கு பாராட்டு கிடைக்கும். எலும்பு/மூட்டு கவனம்.

**கும்பம்:** புதுமையான யோசனைகள் வெற்றி தரும். நண்பர்கள் உதவி கிடைக்கும். நிதி முடிவுகளில் யோசித்து செயல்.

**மீனம்:** உள்ளுணர்வு வலுப்படும். கலை/ஆன்மீகத்தில் ஈடுபாடு. தேவையற்ற கவலைகளை விட்டுவிடுங்கள்.

# கோவையில் கல்லூரி பேராசிரியை தூக்குப்போட்டு தற்கொலை

கோயம்புத்தூர் ஜன.27

கோயம்புத்தூர் மாவட்டம், பாப்பநாயக்கன்பாளையம் எஸ்.என்.ஆர். தெருவை சேர்ந்த தனலட்சுமி (வயது 36), கோவையில் ஒரு தனியார் கல்லூரியில் பேராசிரியையாக வேலை பார்த்து வந்தார். தனலட்சுமிக்கும், தனியார் நிறுவன ஊழியரான மணிகண்டன் என்பவருக்கும் சில ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடந்தது. இவர்களுக்கு 2 குழந்தைகள் உள்ளனர். இவர்கள் வெள்ளலூர் கே.ஆர்.கார்டன் பகுதியில் குடும்பத்துடன் வசித்து வந்தனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் காலை தனலட்சுமி வீட்டில் இருந்தபோது, திடீரென ஜன்னல் கம்பியில் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். இதை பார்த்து அதிர்ச்சி அடைந்த மணிகண்டன், தனலட்சுமியின் தாயார் நாகரத்தினத்திற்கு செல்போனில் தகவல் தெரிவித்தார். மேலும் இது தொடர்பான புகாரின்பேரில் போத்தனூர் போலீசார் வழக்குப்பதிவு செய்தனர்.

போலீசார் மேற்கொண்ட விசாரணையில், தனலட்சுமிக்கும், கணவர் மணிகண்டனுக்கும் இடையே குழந்தைகளை பராமரிப்பது குறித்து பிரச்சினை இருந்து வந்தது. இது தொடர்பாக நேற்று முன்தினம் காலையும் அவர்கள் இடையே திடீரென்று தகராறு மற்றும் வாக்குவாதம் ஏற்பட்டதாக தெரிய வந்தது. அதன்பிறகு மணிகண்டன் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பிவிட்டு வேலைக்கு சென்றார். தனலட்சுமி வேலைக்கு செல்லாமல் வீட்டில் இருந்தார். இதற்கிடையே வேலைக்கு சென்ற மணிகண்டன், தனலட்சுமியிடம் செல்போனில் பேச முயன்றார். ஆனால் அவர் செல்போனை எடுக்கவில்லை. இதனால் மணிகண்டன் வீட்டிற்கு வந்து பார்த்தபோது தனலட்சுமி தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டது தெரியவந்தது. இதுகுறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ரவி தேஜாவுக்கு ஜோடியான பிரியா பவானி சங்கர்...டைட்டில் அறிவிப்பு



நடிகர் ரவி தேஜா தனது 77வது படத்தை அறிவித்துள்ளார். இந்த முறை, அவர் 'மஜிலி' படத்தின் மூலம் பெயர் பெற்ற இயக்குனர் சிவ நிர்வாணத்துடன் கைகோர்த்துள்ளார்.

இன்று ரவி தேஜாவின் பிறந்தநாளை முன்னிட்டு தயாரிப்பாளர்கள் பர்ஸ்ட் லுக் போஸ்டரை வெளியிட்டுள்ளனர். இதில் ரவி தேஜா ஐயப்ப பக்தராக காட்சியளிக்கிறார். இப்படத்திற்கு 'இருமுடி' என்று பெயரிடப்பட்டுள்ளது.

பர்ஸ்ட் லுக் மற்றும் டைட்டிலை பார்க்கும்போது இந்தப் படம் ரவி தேஜாவின் சமீபத்திய படங்களிலிருந்து வித்தியாசமாக இருக்கும் என்று தெரிகிறது.

மைத்ரி மூவி மேக்கர்ஸ் தயாரிக்கும் இப்படத்திற்கு ஜி.வி. பிரகாஷ் குமார் இசையமைக்கிறார். இதில் பிரியா பவானி சங்கர் கதாநாயகியாக நடிக்கிறார். மேலும் படத்தை பற்றிய புதிய விவரங்கள் விரைவில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# ஈஷா ரெப்பாவின் புதிய படம்...டிரெய்லரை வெளியிட்ட விஜய் தேவரகொண்டா



இயக்குனர், எழுத்தாளர் மற்றும் நடிகர் என பன்முகத் திறன் கொண்ட தருண் பாஸ்கர், தற்போது ஒரு கிராமப்புற நகைச்சுவை படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறார்.

இப்படத்தில் அவருக்கு ஜோடியாக ஈஷா ரெப்பா நடித்திருக்கிறார். அறிமுக இயக்குனர் ஏ.ஆர். சஜீவ் இயக்கியுள்ள இந்தப் படத்தை ஸ்ருஜன் யாரபோலு, ஆதித்யா பிட்டி, விவேக் கிருஷ்ணானி, அனுப் சந்திரசேகரன், சாதிக் ஷேக் மற்றும் நவீன் சனிவரபு ஆகியோர் இணைந்து தயாரிக்கின்றனர்.

இப்படத்திற்கு "ஓம் சாந்தி சாந்தி சாந்திஹி" என்று பெயரிடப்பட்டுள்ளது. இப்படம் வருகிற 30ம் தேதி திரைக்கு வருகிறது. ஏற்கனவே வெளியிடப்பட்ட பாடல்கள் , டீசர் நல்ல வரவேற்பைப் பெற்றன.

இந்நிலையில், இப்படத்தின் டிரெய்லரை விஜய் தேவரகொண்டா வெளியிட்டுள்ளார். டிரெய்லரில் தருண் பாஸ்கர் மற்றும் ஈஷா ரெப்பா இடையேயான கெமிஸ்ட்ரி ரசிகர்களை கவர்ந்துள்ளது. இது படத்தின் மீதான எதிர்பார்ப்பை அதிகரித்துள்ளது.

# 'அட்டகத்தி' தினேஷின் 'கருப்பு பல்சர்'...டிரெய்லர் வெளியீடு



'அட்டகத்தி' தினேஷ் நடிக்கும் 'கருப்பு பல்சர்' படத்தின் டிரெய்லர் வெளியாகி இருக்கிறது.

பிரபல இயக்குனர் பா. இரஞ்சித் இயக்கத்தில் 2012ஆம் ஆண்டு 'அட்டகத்தி' என்ற திரைப்படத்தின் மூலம் கதாநாயகனாக அறிமுகமானவர் தினேஷ். 'அட்டகத்தி' படத்தின் பிரமாண்ட வெற்றியால் தினேஷ் பெயருக்கு முன் படத்தின் பெயர் இடம்பெற்றது. தொடர்ந்து விசாரணை, குக்கூ, தமிழுக்கு எண் ஒன்றை அழுத்தவும், திருடன் போலீஸ், இரண்டாம் உலகப் போரின் கடைசி குண்டு போன்ற படங்களில் தன் நடிப்பு திறமையால் அனைவரையும் திரும்பி பார்க்க வைத்தார்.

ஒவ்வொரு படத்திலும் வித்தியாசமான கதாபாத்திரத்தில் நடிக்கும் தினேஷ் சமீபத்தில் வெளியாகி ஹிட் அடித்த 'லப்பர் பந்து' படத்தில் நடித்து பாராட்டுகளை பெற்றார். இப்படத்தை தொடர்ந்து, இவர் முரளி கிருஷ் இயக்கத்தில் 'கருப்பு பல்சர்' என்ற திரைப்படத்தில் நடித்துள்ளார்.

இப்படத்தில் ரேஷ்மா, மன்சூர் அலிகான் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளார். இப்படம் வருகிற 30ம் தேதி வெளியாகிறது. இந்நிலையில், 'கருப்பு பல்சர்' படத்தின் டிரெய்லரை படக்குழு வெளியிட்டுள்ளது. இந்த டிரெய்லர் படத்தின் மீதுள்ள எதிர்பார்ப்பை அதிகரித்துள்ளது.

# விராட் கோலியை பின்னுக்கு தள்ளிய சூர்யகுமார் யாதவ் எதில் தெரியுமா?



இந்தியாநியூசிலாந்து இடையே நடந்து வரும் 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரின் மூன்றாவது போட்டியிலும் இந்திய அணி வெற்றி பெற்றது. நேற்று நடைபெற்ற இந்த ஆட்டத்தில் இந்திய அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் நியூசிலாந்தை வீத்தியது.

கவுகாத்தியில் நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் பேட்டிங் செய்த நியூசிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 153 ரன்கள் எடுத்தது. இந்திய அணி வெறும் 10 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை மட்டும் இழந்து இலக்கை எட்டியது, இதில் அபிஷேக்சர்மா வெறும் 20 பந்துகளில் 68 ரன்கள் எடுத்தார். சூர்யகுமார் யாதவ் 57 ரன்கள் எடுத்தார்.

இந்த ஆட்டத்தில் கிடைத்த வெற்றியின் மூலம் சர்வதேச டி20 போட்டிகளில் இந்தியாவுக்காக அதிக வெற்றிகளைப் பெற்ற கேப்டன்களின் பட்டியலில் சூர்யகுமார் யாதவ் மூன்றாவது இடத்திற்கு முன்னேறி இருக்கிறார். கேப்டனாக 50 வெற்றிகளுடன் ரோகித் முதல் இடத்தில் உள்ளார். அவருக்கு அடுத்த படியாக 42 வெற்றிகளுடன் தோனி உள்ளார்.

32 வெற்றிகளுடன் 3வது இடத்தில் விராட் கோலி இருந்தார். தற்போது 33 வெற்றிகளுடன் விராட் கோலியை சூர்யகுமார் யாதவ் முந்தியுள்ளார். இவர் தலைமையில் இந்திய அணி ஒரு டி20 சர்வதேச தொடரை கூட இழந்ததில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

டி20 போட்டிகளில் இந்திய கேப்டனாக அதிக வெற்றிகள்: ரோகித் சர்மா: 50 வெற்றிகள் எம்.எஸ். தோனி: 42 வெற்றிகள் சூர்யகுமார் யாதவ்: 33 வெற்றிகள் விராட் கோலி: 32 வெற்றிகள்

# டி20 கிரிக்கெட் 2வது வீரர்...மாபெரும் சாதனையை பட்டியலில் இணைந்த அபிஷேக் சர்மா|



இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி தற்போது 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் விளையாடி வருகிறது. முதலிரண்டு போட்டிகளில் இந்திய அணி வெற்றி பெற்ற நிலையில், இரு அணிகளுக்கு இடையிலான 3வது டி20 கிரிக்கெட் போட்டி கவுகாத்தியில் நேற்று நடைபெற்றது.

முதலில் பேட்டிங் செய்த நியூசிலாந்து அணி 20 ஓவர் முடிவில் 9 விக்கெட் இழப்புக்கு 153 ரன் சேர்த்து இந்திய அணிக்கு 154 ரன்களை வெற்றி இலக்காக நிர்ணயித்தது. அடுத்து களமிறங்கிய இந்திய அணியில், அதிரடியாக ஆடிய அபிஷேக் ஷர்மா 14 பந்துகளில் அரைசதம் அடித்தார். இதன்மூலம் டி20 கிரிக்கெட்டில் அதிவேக அரைசதம் அடித்த இரண்டாவது இந்திய வீரர் என்ற பெருமையைப் பெற்றார். இந்திய வீரர் யுவராஜ் சிங் 12 பந்துகளில் அரைசதம் அடித்து குறைந்த பந்தில் அரை சதம் அடித்த இந்திய வீரர்கள் பட்டியலில் முதலிடத்தில் இருக்கிறார். சர்வதேச அளவில் அதிவேக அரைசதம் அடித்த உலக சாதனை நேபாள வீரர் திபேந்திர சிங் ஐரி வசம் உள்ளது. 2023ஆம் ஆண்டு மங்கோலியா அணிக்கு எதிரான ஆசிய விளையாட்டுப் போட்டியில் அவர் வெறும் 9 பந்துகளில் அரைசதம் அடித்தது குறிப்பிடத்தக்கது. டி20 அதிவேக அரைசத பட்டியல்: 9 பந்துகள்: தீபேந்திர சிங் ஐரி (நேபாளம்) 12 பந்துகள்: யுவராஜ் சிங் (இந்தியா) 13 பந்துகள்: மிர்சா அஹ்சன் (ஆஸ்திரியா) 14 பந்துகள்: காலின் முன்ரோ (நியூசிலாந்து) 14 பந்துகள்: ரோகித் சர்மா (இந்தியா) 14 பந்துகள்: அபிஷேக் சர்மா (இந்தியா)

# மகளிர் பிரீமியர் லீக்: பெங்களூரு மும்பை இன்று மோதல்

5 அணிகள் இடையிலான மகளிர் பிரீமியர் லீக் டி20 கிரிக்கெட் தொடர் கடந்த 9ம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது.

இதில் குஜராத் மாநிலம் வதோதரா மைதானத்தில் இன்று நடைபெறும் 16வது லீக் ஆட்டத்தில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு, மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோத உள்ளன. இன்று இரவு 7.30 மணிக்கு போட்டி தொடங்குகிறது.

நடப்பு மகளிர் பிரீமியர் லீக் தொடரில் அரையிறுதி சுற்றுக்கு பெங்களூரு ஏற்கனவே தகுதி பெற்றுவிட்டது. அதேவேளை, அரையிறுதி சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பை தக்கவைக்க மும்பை இந்த ஆட்டத்தில் வெற்றி பெற வேண்டியுள்ளதால் இன்றைய ஆட்டத்தில் பரபரப்பிற்கு பஞ்சமிருக்காது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V. CELL: 9443699066